# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

செய்தி வெளியீடு எண்.14/2006 நாள் 05.10.2006

## உள்ளாட்சித் தேர்தல்
## வாக்காளர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய வழிமுறைகள்

உள்ளாட்சி தேர்தல்கள் அக்டோபர் மாதம் 13 மற்றும் 15ம் தேதிகளில் இரண்டு கட்டமாக நடைபெற உள்ளது என்பதை அனைவரும் அறிவீர்கள். முதலில் வாக்காளர்கள் தங்களுடைய பகுதியில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் எது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இந்த தேர்தலில் வாக்களிக்கும் இடமான வாக்குச்சாவடிகள் அமையப் பெறவுள்ள இடங்களின் விவரமும், வாக்காளர் பட்டியலும் ஏற்கனவே பின்வரும் இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளன.

1. அனைத்து ஊராட்சி மன்ற அலுவலகங்கள்
2. அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள்
3. அனைத்து மாவட்ட ஊராட்சி அலுவலகங்கள்
4. அனைத்து பேரூராட்சி அலுவலகங்கள்
5. அனைத்து மூன்றாம் நிலை நகராட்சி அலுவலகங்கள்
6. அனைத்து நகராட்சி அலுவலகங்கள்
7. அனைத்து மாநகராட்சி மற்றும் மண்டல அலுவலகங்கள்

மேலும் வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்குச்சாவடிகள் பட்டியல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் சுமார் 50,000 வாக்குச்சாவடிகள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், உள்ளாட்சி மன்றத் தேர்தலில் வார்டுக்கு குறைந்த பட்சம் ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்படுவதால் 80,000க்கு மேல் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதி வாக்காளர்கள் அதிக தூரம் நடந்து சென்று வாக்களிக்கும் சிரமத்தை தவிர்ப்பதற்காகவே செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டுள்ளதால், வாக்காளர்கள் சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்த அதே வாக்குச்சாவடியில் இல்லாமல் அருகில் உள்ள பிறிதொரு வாக்குச்சாவடியில் வாக்களிக்க செல்ல வேண்டிய அவசியமும் ஏற்படும். எனவே, அனைத்து வாக்காளர்களும் வாக்குப்பதிவு நாட்களுக்கு முன்னதாகவே தாம் வாக்களிக்க செல்ல வேண்டிய வாக்குச்சாவடியின் விவரம் மற்றும் அது அமைந்துள்ள இடம் போன்றவற்றை ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி அலுவலகங்களில் இருக்கும் பட்டியலில் இருந்து தெரிந்து

கொள்ளலாம். அதே போன்று நகர்ப்புற தேர்தலுக்கான வாக்குச்சாவடி விவரங்களை பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் தெரிந்து கொள்ளலாம். மேலும், தன்னுடைய பெயர் இடம் பெற்றுள்ள வாக்காளர் பட்டியல் பாகம் எண், வரிசை எண் ஆகியவற்றை அரசியல் கட்சிகளிடமிருந்தும் அல்லது வேட்பாளரிடமும் வாக்காளர்கள் முன்னதாகவே தெரிந்துக் கொள்ளலாம்.

மேற்கண்ட அறிவுரைகள் வாக்காளர்களுடைய சிரமங்களை தவிர்ப்பதற்காகவும், தேவையற்ற அலைச்சலை தவிர்ப்பதற்காகவும், வாக்குப்பதிவின் போது நெரிசலை தவிர்ப்பதற்காகவும் வழங்கப்படுகிறது. மேற்கண்ட எந்த விபரங்களும் இல்லாமல் வாக்குச்சாவடிக்கு வாக்குப்பதிவிற்கு வரும் வாக்காளர்கள் தன்னுடைய பெயர் மற்றும் விலாசத்தை வாக்குப்பதிவு அலுவலரிடம் தெரிவித்தாலும், அவர் வசம் உள்ள வாக்காளர் பட்டியலில் விபரங்கள் சரி பார்க்கப்பட்டு, வாக்காளருடைய அடையாளம் உறுதி செய்யப்பட்டு அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்.

வாக்காளர்கள் தன்னுடைய அடையாளத்தை உறுதிசெய்து கொள்வதற்காக குறிப்பிடப்பட்டுள்ள 14 ஆவணங்களில் (இணைப்பில் குறிப்பிடப்பட்டவை) ஏதேனும் ஒன்றினை வாக்குப்பதிவு அலுவலரிடம் காண்பிக்க வேண்டும்.

வாக்குச்சாவடியில் வாக்காளர்கள் அடையாளம் உறுதி செய்யப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கும் பட்சத்தில் அவருடைய இடது கை ஆள்காட்டி விரல் நகத்தின் மேல் இருந்து கீழ் தோல் பகுதி வரை அழியாத மையினால் கோடிடப்படும்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட வாக்காளர்களுக்கு ஊரகப் பகுதியில் உள்ள வாக்குச்சாவடியில், எல்லா தேர்தல்களுக்கும் போட்டி இருக்கும் பட்சத்தில், பின்வரும் வண்ணங்களில் நான்கு வாக்குச்சீட்டுகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | - | வெள்ளை |
| 2. சிற்றூராட்சித் தலைவர் | - | இளஞ்சிவப்பு |
| 3. ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | - | பச்சை |
| 4. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | - | மஞ்சள் |

ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மேற்கண்ட நான்கு தேர்தல்களும் ஒரே சமயத்தில் நடைபெறுவதால், வாக்காளர்கள் நான்கு வாக்குச்சீட்டுகளிலும் வாக்களிக்க வேண்டும். எனவே, இதில் வாக்காளர்கள் மிகக் கவனமாக செயல்பட வேண்டும். தான் விரும்பும் வேட்பாளருடைய பெயர், சின்னம் ஆகியவற்றை சரியாக தேர்வு செய்த பின்னர், தான் வாக்களிக்க விரும்பும் வேட்பாளருடைய பெயர் அல்லது சின்னம் இருக்கும் கட்டத்திற்குள் அம்புக்குறியிட்ட ரப்பர் முத்திரையால் வாக்கைப் பதிவு செய்யவேண்டும்.

சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டின் நிறம் வெள்ளை நிறமாகும். சிற்றூராட்சித் தலைவர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டின் நிறம் இளஞ்சிவப்பாகும். வேட்பாளர்களின் பெயர் இந்த வாக்குச்சீட்டுகளில் இருக்காது. போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கும். ஆகவே, வாக்காளர்கள் வாக்களிக்க வருவதற்கு முன்பாக தாம் வாக்களிக்க விரும்பும் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னம் எது என்பதை தெளிவாக அறிந்து வர வேண்டும். ஒரு வேளை இவ்விவரம் தெரியாவிட்டாலும் கூட, வாக்குச்சாவடியில் ஒட்டப்பட்டிருக்கும் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில், தான் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரின் பெயருக்கு எதிரே எந்த சின்னம் உள்ளது என்பதை பார்த்து தெரிந்து கொள்ளலாம். வாக்குச்சாவடிக்கு வெளியே ஒட்டப்பட்டிருக்கும் வேட்பாளர் விவர

சுவரொட்டியில் வேட்பாளர்களின் பெயர்கள் தமிழ் அகர வரிசையில் அமைக்கப்பட்டு அதன் எதிரே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னம் ஒட்டப்பட்டிருக்கும். ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளுக்கான வாக்குச்சீட்டுகளில் வேட்பாளர் பெயர் இடம் பெறாது. சின்னங்கள் மட்டுமே இருக்கும். இதை வாக்காளர்கள் சரியாக புரிந்து கொண்டு வாக்களிக்க வேண்டுகிறோம்.

ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலைப் பொறுத்த வரையில் சில வார்டுகளில் ஒரு உறுப்பினரையும், சில வார்டுகளில் இரண்டு உறுப்பினர்களையும், சில வார்டுகளில் மூன்று உறுப்பினர்களையும் வாக்காளர்கள் ஒரே வாக்குச்சீட்டில் (வெள்ளை நிறம்) முத்திரையிட்டு தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. ஆகவே, வாக்காளர்கள் வாக்களிக்க செல்லுமுன் தங்களுடைய வார்டுக்கு எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் அதில் எத்தனை பேர் போட்டியின்றி ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்ற விபரத்தை முன்னதாகவே தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர், தனக்கு வாக்குச்சாவடியில் அளிக்கப்படும் வெள்ளை நிற வாக்குச்சீட்டில் எத்தனை சின்னங்களில் முத்திரையிட வேண்டும் என்பதை நன்றாக தெரிந்து கொண்டு வாக்களிக்க வேண்டும். மூன்று உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் வெள்ளை நிற சீட்டில் உள்ள சின்னங்களில், தான் வாக்களிக்க விரும்பும் மூன்று வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மூன்று சின்னங்களில், மேலே சொல்லப்பட்டவாறு முத்திரையிட வேண்டும். இரண்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் வெள்ளை சீட்டில், தான் வாக்களிக்க விரும்பும் இரண்டு வேட்பாளர்களுக்கு அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட இரண்டு சின்னங்களில் வாக்களிக்க வேண்டும். ஒரே உறுப்பினரை தேர்ந்தெடுக்க வேண்டிய இனத்தில், தான் விரும்பும் வேட்பாளருக்கு அவருக்கு ஒதுக்கப்பட்ட ஒரே சின்னத்தில் மட்டும் முத்திரை இட வேண்டும். மேற்கண்ட அறிவுரைகளுக்கு மாறாக அதிகமான சின்னங்களில் முத்திரையிட்டால் அந்த வாக்குச்சீட்டு செல்லுபடி ஆகாது. அதே சமயம், குறைவாக முத்திரையிட்டால், அந்த வாக்குச்சீட்டு செல்லுபடியாகும்.

மாநகராட்சி, நகராட்சி, மூன்றாம்நிலை நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதியில் உள்ள வாக்காளர்கள் ஒரே ஒரு உறுப்பினருக்கு மட்டும் வாக்களிக்க வேண்டும். ஆகவே, அவர்களுக்கு வழங்கப்படும் வெள்ளை நிற வாக்குச்சீட்டில் தாம் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரின் பெயர் அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட சின்னம் இடம் பெற்றுள்ள கட்டத்திற்குள் அம்பு குறியிட்ட ரப்பர் முத்திரையால் வாக்குப்பதிவு செய்ய வேண்டும்.

அனைத்து வாக்காளர்களும் இந்த தேர்தல் வழிமுறைகளை, தவறாது கவனத்தில் கொண்டு வாக்குப்பதிவு நாளன்று காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் தங்களது வாக்குச்சாவடிக்கு தவறாமல் சென்று வாக்களித்து, தங்கள் மக்களாட்சிக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என தேர்தல் ஆணையம் கேட்டுக் கொள்கிறது.

மேலும், இந்த தேர்தல் வழிமுறைகளை வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும், வாக்காளர்களின் பயன் கருதி அவர்களுக்கு எடுத்து சொல்லி முறையாக வாக்களிக்க உதவ வேண்டும் என்று தேர்தல் ஆணையம் விழைகின்றது.

# இணைப்பு

## வாக்காளரை அடையாளம் காண வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஆவணங்கள் (ஏதேனும் ஒன்று)

1) இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை (Electors Photo Identity card)
2) கடவுச்சீட்டு ( Passport)
3) 31.5.2006 வரை வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் (Driving Licence)
4) வருமான வரி அடையாள அட்டை [ Income Tax Identity Cards (PAN cards)]
5) பணி அடையாள அட்டைகள் - மாநில/மைய அரசு (அல்லது) அரசு சார் பொது நிறுவனங்கள் (அல்லது) உள்ளாட்சி அமைப்புகள் (அல்லது) தனியார் பொது நிறுவனங்கள் பணியாளர்களுக்கு வழங்கியுள்ள புகைப்படத்துடன் கூடிய பணியாளர் அடையாள அட்டை
6) பொதுத் துறை வங்கிகள்/அஞ்சலக மற்றும் விவசாயிகளுக்கான புகைப்படத்துடன் கூடிய பற்று வரவு புத்தகங்கள்
7) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களால் 31.5.2006 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வழங்கப்பட்ட மாணவர் அடையாள அட்டை (புகைப்படத்துடனாது)
8) 31.5.2006-க்குள் புகைப்படத்துடன் அச்சிடப்பட்ட குடிமைபொருள் நுகர்வோர் அட்டை (Ration Card)
9) புகைப்படத்துடனான ஓய்வூதிய ஆவணங்கள் அதாவது முன்னாள் படைவீரர் ஓய்வூதியப் புத்தகம் / ஓய்வூதியம் வழங்கும் ஆணை (Pension Pay Order)
10) 31.5.2006 வரை வழங்கப்பட்ட புகைப்படத்துடனான முதியோர் ஓய்வூதிய ஆணை, விதவை ஓய்வூதிய ஆணை.
11) 31.5.2006 வரை வழங்கப்பட்ட புகைப்படத்துடனான இரயில்வே அடையாள அட்டைகள்.
12) புகைப்படத்துடனான சுதந்திர போராட்ட வீரரின் அடையாள அட்டை
13) 31.5.2006க்குள் வழங்கப்பட்ட புகைப்படத்துடனான படைக்கலம் உரிமம் (Arms Licence)
14) 31.5.2006 வரை உடல் ஊனமுற்றோர் இயக்குநரகத்தால் வழங்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோருக்கான புகைப்படத்துடனான அடையாள அட்டை.